# மறைசைக் கலம்பகம்.

## மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

திருமேவும் பாற்கடலிற் சிறந்துறையு மாதவனு ... ... ௦
மருமேவும் புண்டரீக மலரிலுறை நான்முகனுங் . . . . ௦
கந்தமலர்க் கற்பகஞ்சூழ் கவினுறுபொன் னகர்வாழு . ௦
மிந்திரனு மிமையவரு மேனையரு மேத்தெடுப்ப . .. ௦
வலங்கொள்கர மலரிடைப்பொன் மணிப்பிரம்பு தனையேந்தி
வலங்கொளுங்கோ புரவாயின் மருவுநந்தி டணிசெட்ப ... ௦
வணங்குறுவிஞ் சையர்முனிவ ரளவில்கண நாதருளத .. ௦
தணங்குடன் சூழ்ந்தஞ்சலிசெய் தார்கயிலை தனிலமர்ந்தோய்

காரணநா ராயணபூ சிதகவுரி கணவவெங்கள் .. .. . . ௦
காரணவென் றமரர்கள் கடிமலர்கள் சொரிந்திறைஞ்ச... ௦
அரியமா வெனவிளங்கு மணிமுலையா ழைப்பழித்த ... ... ௦
வரியமா மலைமடந்தை யணிகொளிடப் புறமேவ .. ... ௦
வாசமெனக் குழவிமதி மருவுசடை முடியிலங்க . . ... ௦
வாசமுறுங் கொன்றையந்தார் மார்பகத்தின் மிகத்தயங்கச் ௦
சீரேறு மதிலுடுத்த திருமறைசைப் பெருங்கோயி . ... ௦
லேரேறு மரியணையி லிசையுடன்வீற் றிருந்தோய்கேள் ... ௦

இவை இரண்டும் எட்டடித் தரவுகள்.

மண்ணமுத மனலனிலம் வான்மதியெல் லுயிராகி... ... ௦
யெண்ணமுதந் தனைவழிபட் டேத்துமெமக் கருள்கோநீ ௦

கொண்டணிறத் தான்வேண்டக் கோலமுறு களத்தாலங் ௦
கொண்டருளு நின்கருணை கூறலாந் தகைத்தாமோ ... ௦

தேங்கமல மலரிலுறை திசைமுகனும் புகலருநின் ... ...௦
றேங்குபுகழ் சிற்றடியேன் செப்புவதற் கெளிதாமோ... ௦

ஆதியந்த மில்லாம லகண்டபரி பூரணமா ... ... ... ௦
மாதியுனை நானறிந்துஞ் சலிபுரிவ தெவ்வணமோ ... ...௦

உலகுயிர்க ளனைத்தையுமுன் னுதவியளித் தொழிப்பதுநின்
னலகிறிரு விளையாட்டென் றுனக்குப் புகழாமோ ... ௦

நாபிபிரம மென்றிகழு நான்முகனு ரணற்குநடு ... ... ௦
வாம்பிரம நீயென்று னின்பெருமைக் களவாமோ. ... ௦

இவையாறும் ஈரடித் தாழிசைகள்.

